ரீதியில் மாவட்டங்களில் செய்துகொண்டிருந்த விளம்பரங்கள் இன்று செய்யப் படவில்லையே தவிர வேறு எல்லாவிதமான விளம்பரங்களும் புதுத் துறை மூலம் செய்யப்பட்டுத்தான் வருகிறது.

THIRU M. WILLIAM : What was the work allotted to the Publicity Officers and the staff working under them ? Were they not broadcasting the activities of the Department and educating the public on the various social welfare schemes executed by the Government ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தக் கிளை செய்து வந்த பணிகள், சர்க்கார் அச்சகத்தின்மூலம் சர்க்கார் வெளி யிடுகிற வெளியீடுகளையெல்லாம் கிராம மக்களிடம் தர வேண்டும், திரைப் படங்களை கிராம மக்களிடையே போட்டுக் காட்டி சர்க்கார் செய்துள்ள சாதனை களை அவர்களிடம் சுட்டிக் காட்டி விளக்கங்கள் தர வேண்டும். வேறு சாதனைகள் பற்றி சர்க்கார் அச்சகத்தின் மூலம் வெளியிடப்படுகிற வெளி யீடுகள் போன்றவைகளை பள்ளிகள், கல்லூரிகள், இன்னும் பொது ஸ்தா பனங்கள் போன்றயிடங்களில் வெளியிட்டு தகுந்த விளம்பரம் தரவேண் டும் என்பது அவர்கள் பணி. அதன்மூலம் சரியான பலன் கிடைக்க வில்லை என்பதற்காக அந்தப் பதவிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. முறை யான வெளியீடுகள் வேறு பல துறைகளில் இன்று விளம்பரம் செய்யப் பட்டு வருகின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன். மாவட்ட அளவில் உள்ள விளம் பர இலாகா எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதனால் அரசாங்கத்திற்கு ஏதாவது பயன் ஏற்பட்டதற்குரிய அறிகுறி தென்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கடந்த அரசாங்கம் தேர் தலில் தோற்றுப் போனவர்களையும், அமைச்சர்கள், மற்றவர்களின் சொந்தக்காரர்களை பெரியயிடங்களில் வேலைக்கு வைக்க -- பொலிட்டிக்கல் ஃபேவரிட்டிஸம் செய்வதற்காக ஏற்பட்ட அமைப்பு அது. சாதாரண குமாஸ்தா வேலைக்குக் கூட சர்விஸ் கமிஷனிலிருந்து வரவேண்டுமென்ற நியதியிருக்க அதற்கு முற்றிலும் மாறானமுறையில் கெஸட்டட் ஆபிசர்கள் போன்ற நியமனங்கள் செய்யப்பட்டன. அதை நிரூபித்துக்கூட காட்ட முடியும். பலரை, கடலூர் பக்கத்தில் பாராளுமன்றத் தேர்தலில் நின்று தோற்றுப்போன ஒருவருக்கு, பெரம்பலூரில் திரு கக்கன் அவர்கள் சம்பந்தமான ஒருவர், இன்னும் பெரிய தலைவர்களின் சொந்தக்காரர்கள் இவர்கள் எல்லாம் அப்பட்டியலில் வருகிறார்கள். அரசாங்கத்தில் நல்ல முறையில் வேலை செய்து வந்தவர்களுக்கு கெஸட்டட் வேலை கிடைக்காமல் திடீரென்று வெளியில் இருந்து கெஸட்டட் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு வந்து போட்டார்கள். இதுதான் அதுபற்றிய உண்மை நிலை.

திரு. எம். எஸ். மணி : தலைவரவர்களே, இந்த இலாக்கா மாவட்ட அளவில் ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கமே காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஊழியர்களுக்கு வேலை கொடுப்பதற்காக என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே திருச்சி மாவட்டத்திலே இரண்டு அதிகாரிகளுக்கு வேலை கொடுத்ததாக அரசினருக்குப் புகார் வந்ததா? அப்படி வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட புகார் கள் வந்திருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை. நான் மீண்டும் மறுபரிசிலனை செய்து பார்க்கிறேன்.

## மணல்மேடு கூட்டுறவு நூற்பாலை.

148 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு சட்ட கூட் டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுக்கா, மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற் பாலை நிர்வாகிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே இருந்து வந்த தகராறு தீர்க்கப்பட்டு விட்டதா?

[1968 மார்ச் 5

(இ) ஆம் எனில் இவ்வாலையில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டார்களா?

(உ) இந்த ஆலை இப்பொழுது சரிவர இயங்கி வருகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம். தஞ்சாவூர் மாவட்டத்தில் மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்டில் கதவடைப்பு செய்திருப்பதாகவும், தொழிலாளர்களை வேலையில் அமர்த்தாமலிருப்பதாகவும் சொல்கிற தகராறு தீர்க்கப்பட்டுவிட்டது.

(ஆ) பணியிலிருந்து நீக்கப்பெற்ற 113 தொழிலாளர்களில் 1967 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் தேதிவரை 61 தொழிலாளர்கள் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்டார்கள். யார்மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லையோ அவர்களையும் இவ்வண்ணமே வேலைக்கு எடுத்துக் கொள்ள ஆலை நிர்வாகம் தயாராயிருக்கிறது.

(உ) இந்நூற்பாலை இப்போது அமைதியுடன் இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** இப்பொழுது அந்த நூற்பாலையில் பங்கு சேர்க்க வேண்டுமென்று தாசில்தார்களும் மற்றவர்களும் வியாபாரிகளை நிர்ப்பந்தித்து நூறு, நூறு ரூபாய் கொடுக்க வேண்டுமென நிர்ப்பந்தப்படுத்தி வசூலிப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது தொழிலாளர் பற்றிய கேள்வி. பண வசூல்களைப் பற்றித் தொழிலமைச்சரவர்களிடம் கேட்க வேண்டும்.

**MR. SPEAKER :** As it is past 10 o'clock, I will restric the supplementary questions to the relevant subject.

மாயூரம் தாலூக்கா, மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலை நிர்வாகிகள் பற்றிய வினாவை டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்களாம்.

**DR. H. V. HANDE :** Sir, will the Hon. Minister tell us the exact details and the reasons for the labour dispute ? What were the demands put forward by the labour and what were the demands accepted by the management ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தத் தகராறு எந்தவிதமான கோரிக்கையின் அடிப்படையிலும் எழவில்லை. 1966 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதியன்று 11 பேருக்கு டெம்பரரி ஆஃப், லே ஆஃப், கொடுக்கப்பட்டது. அதுபற்றிய பிரச்சினையால் ஸ்டே இன் ஸ்ட்ரைக் நடந்தது. அந்தத் தகராறில் 113 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பிறகு சமரசம் செய்யப்பட்டு 61 பேர் எடுத்துக்கொள்ளப்பட்டனர். இப்போது வழக்கில் 9 பேர் இருக்கிறார்கள். அந்த 9 பேரைத் தவிர மீதிப்பேர் வந்தால் சேர்த்துக்கொள்ளப் போவதாக அந்த நிர்வாகத்தினர் ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**MR. SPEAKER :** As it is past 10 o'clock I will restrict the supplementary questions to the relevant subject only.

மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலையிலுள்ள தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு பற்றிய வினாவை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கேட்கலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், வேலைபளு சம்பந்தமாக இந்தத் தகராறு மேனேஜ்மெண்டார்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டதா ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** முன்னரே சொன்னேன், அப்படிப்பட்ட தகவல் என்னிடத்தில் இல்லை. 11 பேருக்கு லே ஆப் கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் தகராறு எழுந்தது.

**1968 மார்ச் 5]**

**திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, இந்த மணல்மேட்டி லுள்ள நூற்பாலையில் தொழில் தகராறு நடைபெற்றது எந்த ஆண்டு ? இப்பொழுது அந்த ஆலையில் எந்த விதமான தகராறுமில்லாமல் சுமுகமாக நடைபெறுகிறதுஎன்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு. திரு செ. மாதவன் :** 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பொழுது சுமுகமாக நடை பெறுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்தப் பஞ்சாலைகளில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு "வேஜ் போர்டு" திட்டமுள்ளது. அந்த திட்டத்தின் அடிப்படையிலே கொடுத்தால் இப்படிப்பட்ட தகராறுகள் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படும். ஆகவே எல்லாக் கூட்டுறவு பஞ்சாலைகளிலும் அந்த அடிப்படையிலே திட்டத்தை நிறை வேற்றக்கூடிய அளவுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் கூறிய பதிலைக் கவனித் திருந்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்காது. இந்தத் தகராறு அப் படிப்பட்ட அடிப்படையில் எழவில்லை. "லே ஆஃப்" பற்றி எழுந்த தகராறுதான் இது.

### தரங்கம்பாடிக்குக் குடி தண்ணீர் திட்டம்.

* 149 வினு.—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விணக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் வட்டம், தரங்கம்பாடியில் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கக் கோரி பொது மக்களிடமிருந்தும், நகராட்சி மன்றத்தி லிருந்தும் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) தரங்கம்பாடியில் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கக் கோரி தரங்கம்பாடி மறுமலர்ச்சி மன்றத் திலிருந்தும் நகராட்சி மன்றத்திலிருந்தும் 1967 ஏப்ரல் மாதத்தில் விண்ணப்பம் வந்தது.

(இ) நிதி பற்றுக்குறையால் பஞ்சாயத்துக்கு குடிநீர்த் திட்டம் நிறை வேற்றுவதற்கு சர்க்காரால் தற்பொழுது இயலாது என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

**திரு. எஸ். கணேசன் :** தலைவரவர்களே, அந்தத் தொகுதி நாடாளு மன்ற உறுப்பினராகவும், மத்திய துணை அமைச்சராகவுமிருந்த ஒருவர் மத்திய சர்க்கார் உதவி பெற்று இந்தக் குடி தண்ணீர் திட்டத்தை நிறை வேற்றுவதாக அந்தத் தொகுதி மக்களுக்கு உறுதியளித்ததாக சொல்லிக்கொள்கிறார்கள். அப்படி ஏதேனும் மத்திய சாக்கார் இந்த குடிதண்ணீர்த் திட்டத்திற்கு உதவி செய்ய முன் வந்துள்ளனரா ? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படி மத்திய சர்க்கார் உதவி செய்ய முன் வந்திருப்பதாகத் தகவல் இல்லை.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், தரங்கம்பாடி கடற்கரையோரம் மீன வர்கள் பெரும்பகுதி வாழும்பிரதேசம். அதையொட்டி மீனவர்களுக்குக் குடி தண்ணீர் நலனுக்காக திருச்சிராப்பள்ளியைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு ஸ்பெஷல் ஸ்கீமை கடந்த அரசு செய்து அதற்கு சர்வே செய்யப்பட்டது. அவ்வாறு தரங்கம்பாடிக்குக் கொண்டு வருவதன் மூலம் திருமுல்லைவாயல் போன்ற பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க அரசு